உ

சிவமயம்

தேவி தோத்திர மஞ்சரீ

திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள்

தொகுத்தது.

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

1931

விலை அணு 4.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி

உ

சிவமயம்

தேவி தோத்திர மஞ்சரி

திருச்சிற்றம்பலம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.—**சம்பந்தர்.**

திருச்சிற்றம்பலம்

தாயுமான சுவாமிகள்

மலைவளர்காதலி

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிர மணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளு முண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்த வொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனும் அகந்தை தீர்த்தென்

மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுரூ தனன்தங் கையே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே. க

பூதமுத லாகவே நாதபரி யந்தமும்
பொய்யென் றெனைக்காட்டியென்
போதத்தின் நடுவாகி அடியீறும் இல்லாத
போதபூ ரணவெளிக்குள்
ஏதுமற நில்லென் றுபாயமா வைத்துநினை
எல்லாஞ்செய் வல்லசித்தாம்
இன்பவுரு வைத்தந்த அன்னையே நின்னையே
எளியேன் மறந்துய்வனோ
வேதமுத லானநல் லாகமத் தன்மையை
விளக்கும்உள் கண்இலார்க்கும்
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவா தம்புகலும்வாய்
வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கணுடை
மாமருந் துக்கமிர்தமே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே. ௨

பிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட கலமெனவும்
மெய்யெலாம் உள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைக ளுறவேதனுந்
துடியிட்ட வெவ்வினையை யேவினுன் பாவிநான்
தொடரிட்ட தொழில்க ளெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வதென்றோ

பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள்
புந்திமுத லானபேய்கள்
போராடு கோபாதி ராக்ஷஸப் பேய்களென்
போதத்தை யூடழித்து
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தானிவ் வல்லலெல்லாம்
வீழும் படிக்குனது மௌனமந் த்ராதிக்ய
வித்தையை வியந்தருள்வையோ
நாதவடி வாகிய மஹாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்டவெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞானவா னந்தமயிலே
வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வரிய
மகிமைபெறு பெரியபொருளே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே. எ

அகிலாண்ட நாயகி

வட்ட. மிட்டொளிர் பிராண வாயுவெனு
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெ னும்பெரிய மத்த யானையையென்
வசம டக்கிடின்மும் மண்டலத்
திட்ட முற்றவள ராச யோகமிவன்
யோக மென்றறிஞர் புகழவே
ஏழை யேனுலகில் நீடு வாழ்வன்இனி
இங்கி தற்கும்அனு மானமோ

பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுப யோகமும்
பார காவிய கவித்வ நான்மறை
பாராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியுந லன்ப ருக்கருள
விருது கட்டியபொன் அன்னமே
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகியென் அம்மையே. அ

பெரிய நாயகி

காற்றைப் பிடித்துமட் காகத் தடைத்தபடி
கன்மப் புனற்கு ளூறுங்
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
காயத்துள் எனையி ருத்திச்
சோற்றைச் சுமத்திநீ பந்தித்து வைக்கத்
துருத்திக்குள் மதுவென்னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன்அருள்
தோயநீ பாய்ச்சல் செய்து
நாற்றைப் பதித்தென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட்டியும்
நமனென தீப்பூடும் அணுகாமல் முன்னின்று
நாடுசிவ போக மான
பேற்றைப் பகுத்தருளி யெனையாள வல்லையோ
பெரியஅகி லாண்ட கோடி
பெற்றநா யகிபெரிய கபிலைமா நகர்மருவு
பெரியநா யகியம்மையே. க

சிவப்பிரகாச சுவாமிகள்

விருத்தகிரி

பெரிய நாயகி

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன்
முக்கணாண் டகைநின தெழில்கூர்
முகம்புலர் தலைக்கண் டெல்வளைந் தடியின்
முனைப்பிறைக் கோடுகொண் டுழுது
விழுமணி யரவ நுழைசடா டவியின்
விண்ணதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினான்
மென்கொடி யெனநினை யுணர்ந்தேன்
செழுமணி நீல மழைமுகில் தவழுஞ்
சிலம்பெனும் புற்றினின் றூர்ந்து
திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத்
தினமணி யெனப்படுஞ் செங்கேழ்
கெழுமணி யுமிழ்ந்து பேரிருள் துரந்து
கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே.

காமமென் கின்ற கதுவுவெங் தீயுங்
கடுஞ்சின மெனப்படு புலியுங்
களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக்
கறையடிக் களிநல்யா னையுமே

தாமிகு மெனது மனமெனும் வனத்தில்
தனிவரல் வெருவினை யாயில்
தழலினின் றுடிப் புலிகரி யுரிபோர்த்
தடுத்தவாண் டுணையொடும் வருவாய்
ஈமவெள் ளெலும்பிங் கிடப்படு மெனத்தான்
எலும்பணி கடவுள்மா னதியாய்
இருந்துநல் லன்னங் கொண்டுமெய் வெளுப்ப
இணைதபு கங்கையை யிகழ்ந்து
கீழ்மைசொல் கின்ற தொன்றுமின் றுயிற்
கிடைக்குமோ விதன்குண மென்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. உ

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான
சொரூபியென் றருமறை யனைத்துஞ்
சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்தேன்
சுரந்தநின் திருமுலைச் செழும்பால்
வட்டிலிற் கொச்சைப் பிள்ளைமுன் னுண்டு
வண்புகழ் ஞானசம் பந்த
வள்ளலென் றிடப்பேர் பெற்றான் மொழிபோல்
மையல்தீர் செய்யுள்செய் தமையால்
எட்டிநற் றிகிரி பறித்தெறிந் துரற்கா
லியானையை யுருட்டிவாங் குதிரை
யெறிந்துசங் கதிர்த்துக் கொடுமர முறித்திட்
டெதிர்ந்திடார் தமைவிடுத் தோடிக்
கிட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக்
கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. ங

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா
முறுகுழி மேடுக ணிரவி
ஒழிவிலா வாய்மை மெழுக்கினாற் பூசி
உயர்தரு மனமெனப் படுமோர்
பள்ளிமென் றவிசி லிருத்தினின் பதியைப்
பழுதில்யா னெனப்படு நெல்லைப்
பழமல மாயைத் தவிடுமி போக்கிப்
பாகஞ்செய் தென்றருத் திடுவாய்
துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர்
சூழல்வெண் ணெய்க்குட முருட்டித்
துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த்
தோய்ந்துநின் றுடிளங் கயற்கட்
கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக்
கேடில்சீர்க் கண்ணனு டதல்போற்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. ௪

வேறு

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துகொடுஞ்
சித்தர்க் ககற்றுநின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்கு மெண்ணி மதியுடையே னென்பன் வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நாலினுஞ் செம்மை பெரியம்மையே.

நின்போ லொரு ளாளரென் றேசொல நின்கொழுநன்
என்போ னொருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே
அன்போர் சிறிது மிலனாகப் போக அதற்கிசைந்து [யே.
பின்போய் விடாதுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மை

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை
ஓதிற் பிறரென அச்ச முறாமல் உயிர்களெல்லாம்

நீதிப் புதல்வர்க ளாயின ஆதலின் நீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே.

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துறைக் கன்றெடுமோர்
அரிய முடியம் புலியோடு மேவிளை யாடுகின்றாய்
தெரிய வரிய பதினா லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப் பெரியம்மையே.

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பால்மெல் விரல்நுதியால்
தெள்ளித் துளியள வாயினுந் தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத் தாலென் பெரியம்மையே.

ஆறாத் துயர்கொண் டடியேன் சலிப்ப அதுசெவியில்
ஏறும லேயிருந் தாலென்செய் வேனெங்கள் ஈசற்கொரு
கூறாகி யண்ட முதலா யிளமை குலவுதவப்
பேறாகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே. கo

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் தருமிரு நாழிநெல்லால்
வினைமாட்சி கொண்டுயி ரெல்லா மளித்தருள் மேன்மையினால்
மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்குண் டுலகின்ற குன்றைப் பெரியம்மையே.

நேடிய விலங்க லொருசிலை யாக்கிய நின்பதிமேற்
கொடிய வநங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்ந்த
ஒடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநடுப்
பிடியு ளடங்கிய தென்னிது குன்றைப் பெரியம்மையே. கஉ

குமரகுருபர சுவாமிகள்

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின்
றுன்திருத் தாதை நின்னை
ஒருமுறை கரம்பொத்தி வருகென அழைத்திடுமுன்
ஓடித் தவழ்ந்து சென்று
தண்ணுலா மழலைப் பசுங்குதலை அமுதினிய
தாய்வயிறு குளிர வூட்டித்
தடமார்ப நிறைகுங் குமச்சே றளைந்துபொற்
றுள்தோய் தடக்கை பற்றிப்
பண்ணுலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும்
பணைத்தோ ளொருத்த மேறிப்
பாலொளிய மரகதத் திருமேனி பச்சைப்
பசுங்கதிர் ததும்ப மணிவாய்த்
தெண்ணிலா விரியநின் றுடும் பசுந்தோகை
செங்கீரை யாடி யருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடி யருளே. க

முகமதி யூடெழு நகைநில வாட முடிச்சூ ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி முரிப்பொ டசைந்தாட
இகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமுமாட
விடுநூ புரவடி பெயரக் கிண்கி ணெனுங்கிண் கிணியாடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்கு துவண்டு துவண்டாடத்
தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர் சூலுடை யாலிடைமற்
றகில சராசர நிகிலமொ டாடிட ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. உ

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி
குன்றே நின்றாதுங்
குழலிசை பழகிய மழைமுகி லெழுவெழு
கொம்பே வெம்பாசம்
மருவிய பிணிகெட மலைதரு மருமைம
ருந்தே சந்தானம்
வளர்புவ னமுமுணர் வருமரு மறையின்வ
ரம்பே செம்போதிற்
கருணையின் முழுகிய கயல்திரி பசியக
ரும்பே வெண்சோதிக்
கலைமதி மரபிலொ ரிளமதி யெனவிளர்
கன்றே யென்றேறும்
திருமகள் கலைமகள் தலைமகள் மலைமகள்
செங்கோ செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. ௯

தாலப் பருவம்

காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி
கழியிற் சிறுகுழியிற்
கரையிற் கரைபொரு திரையில் தலைவிரி
கண்டலில் வண்டலினெற்
போரிற் களநிறை சேரிற் குளநிறை
புனலிற் பொருகயலிற்
பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர்
குழையிற் பொருகயல்போய்த்
தேரிற் குமரர்கள் மார்பிற் பொலிதரு
திருவிற் பொருவில்வரிச்
சிலையில் திரள்புய மலையிற் புலவி
திருத்திட வூழ்த்தமுடித்

தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. ௯

முதுசொற் புலவர் தெளித்த பசுந்தமிழ் நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை கீழ்மே லாகாமே
அதிரப் பொருது கலிப்பகை யென்றமிழ் நீர்நா டாளாமே
அகிலத் துயிர்க ளயர்த்து மறங்கடை நீணீர் தோயாமே
சிதைவுற் றாசியல் நற்றரு மங்குடி போய்மாய் வாகாமே
செழியர்க் கபயரு மொப்பென நின்றுண ராதா ரோதாமே
மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி தாலோ தாலேலோ
மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி தாலோ தாலேலோ.

சப்பாணிப் பருவம்

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத
வெளியிற் றுவாத சாந்த
வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை
விரிந்ததமிழ் நாடு நெற்றிக்
கண்ணளிக் குஞ்சுந் தரக்கடவுள் பொலியுமறு
காற்பீட மும்மெம் பிரான்
காமர்பரி யங்கக் கவின்தங்கு பள்ளியங்
கட்டிலுங் தொட்டி லாகப்
பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப்
பசுந்தேற லூறலாடும்
பைங்குழவி பெருவிரல் சுவைத்துநீ பருகிடப்
பைந்தேற லூறு வண்கைத்
தண்ணளிக் கமலஞ் சிவப்பூற அம்மையொரு
சப்பாணி கொட்டி யருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டி யருளே. ௧

செழுமறை தெளிய வடித்த தமிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுது குழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிபெறுடும் வளர வளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகி முழுப்பிர சத்திர சத்தோடே
குதிகொளு நறிய கனிச்சுவை நெக்க பெருக்கேபோல்
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரு மடப்பிடி கொட்டுக சப்பாணி. எ

முத்தப் பருவம்

காலத் தொடுகற் பனைகடந்த கருவூ
லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுள்
மணியே உயிரால
வாலத் துணர்வி நீர்பாய்ச்சி வளர்ப்பார்க்
கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொல் மழலை
ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே உயிர்த்துணையாந் தோன்றாத்
துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில் துரியங்
கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்த முழுமுதலே
முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடு மும்முலையாய்
முத்தந் தருகவே. அ

உருகி யுருகி நெக்குநெக்கு ளுடைந்து
கசிந்திட் டசும்பூறும்
உழுவ லன்பிற் பழவடியா ருள்ளத்
தடத்தி லூற்றெடுத்துப்

வடியிட்ட செந்தமிழின் அருமையிட் டாரூரில்
அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருளடிகள்
அடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே. ௫

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகியெழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே. ௬

யாகமோ பெறவுனைப் பாடஅறி யேன்மல
பரிபாகம் வரவும்மனதில்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப

தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ்
சிந்தியேன் பேரின்பமோ
சேரவென் றுற்கள்ள மனதுமோ மெத்தவுஞ்
சிந்திக்கு தென்செய்குவேன்
மோகமோ மதமோ குரோதமோ லோபமோ
முற்றுமாற் சரியமோதான்
முறியிட் டெனைக்கொள்ளும் நிதியமோ தேடவெனின்
மூசுவரி வண்டுபோல
மாகமோ டவும்வல்லன் எனையாள வல்லையோ
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப்பெண் உமையே. ௫

தூளேறு தூசுபோல் வினையேறு மெய்யெனுந்
தொக்கினுட் சிக்கினாளுஞ்
சுழலேறு காற்றினிடை அழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவையெல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின்
நட்பேற வுள்ளுடைந்து
நயனங்கள் அற்றதோர் ஊரேறு போலவே
நானிலந் தனில்அலையவோ
வேளேறு தந்தியைக் கனதந்தியுடன்வென்று
விரையேறு மாலைசூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற
வெருட்டிய கருங்கூந்தலாய்
வாளேறு கண்ணியே விடையேறும் எம்பிரான்
மனதுக் கிசைந்தமயிலே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப்பெண் உமையே. ௬

பெருகு பரமா னந்தவெள்ளப் பெருக்கே
சிறியேம் பெற்றபெரும்
பேறே யூறு நறைக்கூந்தற் பிடியே
கொடிநுண் ணுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்ப்பூங்
கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை மழலை
யரும்பச் சேதாம்பன்
முருகு விரியுஞ் செங்கனிவாய் முத்தந்
தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய்
முத்தந் தருகவே. ௯

கோடுங் குவடும் பொருதரங்கக் குமரித்
துறையிற் படுமுத்தும்
கொற்கைத் துறையில் துறைவாணர் குளிக்குஞ்
சலாபக் குவான்முத்தும்
ஆடும் பெருந்தண் டுறைப்பொருநை யாற்றிற்
படுதெண் ணிலாமுத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சார லருவி
சொரியுங் குளிர்முத்தும்
வாடுங் கொடிநுண் ணுசுப்பொசிய மடவ
மகளி ருடனாடும்
வண்டற் றுறைக்கு வைத்துநெய்த்து மணந்தாழ்
நறுமென் புகைப்படலம்
மூடுங் குழலாய் நின்கனிவாய் முத்தந்
தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய்
முத்தந் தருகவே. ௧௦

வருகைப் பருவம்

தொடுக்குங் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ
வியமே மதுகரம் வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. கக

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. க௨

அம்புலிப் பருவம்

கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு
கலாபேத மென்ன நின்னைக்
கலைமறைகள் முறையிடுவ கண்டோ வலாதொண்
கலாநிதி யெனத் தெரிந்தோ
வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின்
வழிமுத லெனக்கு றித்தோ
வளர்சடை முடிக்கெந்தை தண்ணறுங் கண்ணியா
வைத்தது கடைப் பிடித்தோ
குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு
கூடப் பிறந்த தோர்ந்தோ
கோமாட்டி யிவள்நின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்று யுனக்
கண்டுபடு சீரிதன் றுதலால் இவளுடன்
அம்புலீ யாட வாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாட வாவே. க௩

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி
யிவள்பெரும் புகழ்நெடு நிலா
எங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மெள்ளநீ
யெள்ளளவு மொண்டு கொண்டு

வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்த கருணை
வெள்ளக் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனை கொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம்மை
வைத்திடுஞ் சத்தி யேகாண்
மற்றொரு சுதந்தர நினக்கென விலைக்கலை
மதிக்கடவுள் நீயும் உணர்வாய்
அண்ணலங் களியானை அரசர்கோ மகளுடன்
அம்புலீ யாட வாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாட வாவே. கச

அம்மானைப் பருவம்

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமும்
ஒண்டா ளத்திரளும்
ஒழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை
ஒருமூன் றடைவிலெடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற்செலநின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலைமேற்
பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு
பெடையோ டரசவனம்
அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமகள்
ஆடுக அம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக அம்மனையே. கரு

நீராடற் பருவம்

சோற்கொடி யோடு மலர்க்கொடி கொய்து
தொடுத்த விரைத்தொடையும்
சுந்தரி தீட்டிய சிந்துர மும்மிரு
துங்கக் கொங்கைகளின்
விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை
வெள்ளங் கொள்ளைகொள
வெளியே கண்டுநின் வடிவழ கையன்
விழிக்கு விருந்துசெய
இற்கொடி யோடு கயற்கொடி வீர
னெடுத்த கருப்புவிலும்
இந்திர தனுவும் வணங்க வணங்கு
மிணைப்புரு வக்கொடிசேர்
பொற்கொடி யிமய மடக்கொடி வைகைப்
புதுநீ ராடுகவே
பொருநைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே. கரு

ஊசற் பருவம்

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகுபொற்
றிருவூசல் பாடி யாடச்
சிவபிரான் திருமுடி யசைப்பமுடி மேற்பொங்கு
செங்கணா வாசகி லம்மைத்
தார்க்கும் பணுடவி யசைப்பச் சராசரமும்
அசைகின்ற தம்மனை யசைந்
தாடலால் அண்டமும் அகண்டபகி ரண்டமும்
அசைந்தாடு கின்ற தேய்ப்பக்

கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ்நறும் புகையின் மிசைக்
கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலங்
கைக்கொள இருட்படலம் வான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடி யருளே
புழுகுநெய்ச் சொக்கர் திருவழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடி யருளே. ௧௭

மீனாக்ஷியம்மை குறம்

கருமலையச் செருமலையுங் கைம்மலைய மன்னர்தொழ
வருமலையத் துவசனருள் மடக்கொடியைப் பாடுவனே. ௧௮

விண்புரக்குங் கதிர்மௌலி முடிகவித்து வெண்குடைக்கீழ்
மண்புரக்கும் அபிடேக வல்லியைநான் பாடுவனே. ௧௯

வெம்புருவச் சிலைகுனித்து விழிக்கணைக ளிரண்டெந்தை
மொய்ம்புருவத் தொடுத்தெய்த மொய்குழலைப் பாடுவனே.

ஊன்கொண்ட முடைத்தலையிற் பலிகொண்டார்க் குலகேழு
தான்கொண்ட அரசாட்சி தந்தாளைப் பாடுவனே. [ந்

வானவர்கோன் முடிசிதறி வடவரையிற் கயலெழுது
மீனவர்கோன் றனைப்பயந்த மெல்லியலைப் பாடுவனே. ௨௨

கான்மணக்குஞ் சடைக்காட்டிற் கவின்மணக்குங் கடிக்கொன்றைத்
தேன்மணக்கும் பிறைநாறுஞ் சீரடியைப் பாடுவனே. ௨௩

எவ்விடத்துந் தாமாகி யிருந்தவருக் கருந்தவரும்
வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே.

வைத்தபகி ரண்டமெனு மணற்சிற்றில் இழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே. ௨௫

இலைக்குறியுங் குணமுநமக் கென்பார்க்கு வளைக்குறியும்
முலைக்குறியு மணிந்திட்ட மொய்குழலைப் பாடுவனே. உசு

ஒன்றாகி அனைத்துயிர்க்கும் உயிராகி யெப்பொருளும்
அன்றாகி அவையனைத்தும் ஆனாளைப் பாடுவனே. உள

பரசிருக்குந் தமிழ்க்கூடற் பழியஞ்சிச் சொக்கருடன்
அரசிருக்கும் அங்கயற்கண் ணாரமுதைப் பாடுவனே. உஅ

மீனாக்ஷியம்மை இரட்டைமணி மாலை

குணங்கொண்டு நின்னைக் குறைஇரந் தாகங் குழையப் புல்லி, மணங்கொண் டவரொரு வாமங்கொண் டாய்மது ரேசரவர், பணங்கொண் டிருப்ப தறிந்துகொள் ளாயம்மை பைந்தொடியார், கணங்கொண் டிறைஞ்சு நினக்குமுண் டாற்பொற் கனதனமே. உகூ

கனமிருக்குங் கந்தரர்க்குன் கன்னிநா டீந்தென்
தினமிரப்ப தோவொழியார் தேனே—பனவனுக்காப்
பாமாறி யார்க்குனைப்போற் பாரத் தனமிருந்தால்
தாமாறி யாடுவரோ தான். ௩௦

தானின் றுலகு தழையத் தழைந்த தமிழ்மதுரைக்
கானின்ற பூங்குழற் கர்ப்பூர வல்லி கருங்கட்செய்ய
மீனின் றுலாவி விளையா டுவதுவிண் ணாறலைய
வானின்ற தோர்வெள்ளி மன்றாடு மானந்த மாக்கடலே. ௩௧

கடம்பவன வல்லிசெல்வக் கர்ப்பூர வல்லி
மடந்தை யபிடேக வல்லி—நெடுந்தகையை
ஆட்டுவிப்பாள் ஆடல்வெட் காடல்வே றில்லையெமைப்
பாட்டுவிப்ப துங்கேட் பதும். ௩௨

பதுமத் திருவல்லி கர்ப்பூர வல்லிநின் பாதபத்ம
மதுமத் தொடுந்தம் முடிவைத்த வாமது ரேசரவர்

இதுமத்தப் பித்துமன் றேழைமை முன்ன ரிமையவர்கைப்
புதுமத் தினைப்பொற் சிலையென் றெடுத்த புராந்தகர்க்கே.

தருமே கடம்பவனத் தாயேநின் சிற்றில்
அகமேயென் னெஞ்சகம தானன்—மகிழ்நரொடும்
வாழாநின் றுயிம் மனையிருள்மூ டிக்கிடப்ப
தேழாய் விளக்கிட் டிரு. ௩௪

இரைக்கு நதிவைகை பொய்கைபொற் றாமரை யிர்ந்தண்டமிழ்
வரைக்கு மலைதென் மலயம தேசொக்கர் வஞ்சநெஞ்சைக்
கரைக்குங் கனகள்வி கர்ப்பூர வல்லிக்குக் கற்பகத்தார்
நிரைக்கும்பொற் கோயில் திருவால வாயுமென் னெஞ்சமுமே.

நெஞ்சே திருக்கோயி னீலுண் டிருண்டகுழன்
மஞ்சேந் தபிடேக வல்லிக்கு—விஞ்சி
வருமந்த காவென் வழிவருதி யாவிக்
கருமந் தகாதுன் கருத்து. ௩௫

மணியே யொருபச்சை மாணிக்க மேமருந் தேயென்
றுன்னைப், பணியேன் பணிந்தவர் பாலுஞ்செல் லேனவர்
பாற்செலவுங், துணியேன் துணிந்தனை யென்னுரைக்
கேன்மதுரைத்திருநாட், டணியே யனைத்துயிர்க்கும் மனைநீ
யென் றறிந்துகொண்டே. ௩௭

கோண்டைச் செருக்குங் குறுநகையு நெட்டயிற்கட்
கெண்டைப் பிறக்கமும்வாய்க் கிஞ்சுகமுங்—கொண்டம்மை
கற்பூர வல்லி கருத்திற் புகப்புகுந்தாள்
நற்பூர வல்லியுமென் நா. ௩அ

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாந் தொடுத்துப் புனைவதற்கே. ௩௯

பொற்பூர வல்லி கமலத்த ளேகொல் புகுந்தகமும்
வெற்பூர வல்லி பிறந்தக மும்மது வீட்டுமென்னே [ந்
அற்பூர வல்லியெம் வன்னெஞ்சக் கஞ்சத்தெம் மையனொடு
கற்பூர வல்லி குடிபுகுந் தேநின்ற காரணமே. ௪௰

சி த ம் ப ர ம்

சிவகாமியம்மை இரட்டை மணிமாலை

ஒருவல்லி யல்லிக் கமலத்து ளூறுபைந் தேறலொத்த
திருவல்லி தில்லைச் சிவகாம வல்லியென் சித்தத்துள்ளே
வருவல்லி செம்பொன் வடமேரு வில்லியை வாட்கணம்பாற்
பொருவல்லி பூத்தலி னன்றேயிப் பூமியைப் பூவென்பதே.

பூத்ததுவு மீரேழ் புவனமே யப்புவனங்
காத்ததுமென் னம்மை கருணையே—கூத்தரவர்
பாடுகின்ற வேதமே பாராவிப் பாரொடுங்க
ஆடுகின்ற வேதமே யங்கு. ௪௨

சிறைசெய்த தூநீர்த் திருத்தில்லைத் தொல்லை
மறைசெய்த வீர்ந்தண் மழலைப்—பிறைசெய்த
ஒண்ணுதலைக் கண்ணுதலோ டுள்ளத் திருத்தியின்ப
நண்ணுதலைக் கண்ணுதலே நன்று. ௪௩

நங்காய் திருத்தில்லை நன்னுத லாய்நுத னாட்டமொத்துன்
செங்காவி யங்கண் சிவப்பதென் னேசெழுங் கங்கையைநின்
பங்காளர் நின்னைப் பணியுமப் போதுகைப் பற்றிமற்றென்
றங்கா யெழுந்திரென் றலைவட் கேது தலையெடுப்பே. ௪௪

தலைவளைத்து நாணியெந்தை தண்ணளிக்கே யொல்குங்
குலைவளைத்த கற்பகப்பூங் கொம்பர்—கலைமறைகள்
நான்குமறி யார்க்கிந்த ஞாலமெலா மீன்றளித்துந்
தான்குமரி யாகியிருந் தாள். ௪௫

அல்லிக் கமலத் துணைத்தாளி லென்றுமென் னுளக்குள்ளே
புல்லிக் கிடந்தன போலுங்கெட் டேன்புன் மலக்கிழங்கைக்
கல்விப் புலக்கலை கட்டருள் பூத்துட் களிந்தமலை
வல்லிக் கிலைகொன் மருங்கென் றிரங்கு மறைச்சிலம்பே. சசு

மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்—நறைநாறு
நாட்கமலஞ் சூடே நறுந்துழாய் தேடேநின்
தாட்கமலஞ் சூடத் தரின். சஎ

சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. சஅ

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. சகூ

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. ருO

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. ருக

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. ௫௨

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. ௫௩

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. ௫௪

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. ௫௫

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே. ௫௬

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. ௫௭

இராமலிங்க சுவாமிகள்

வடிவுடை மாணிக்கமாலை

கடலமு தேசெங் கரும்பே யருட்கற்ப கக்கனியே
உடலுயி ரேயுயிர்க் குள்ளுணர் வேயுணர் வுள்ளொளியே
அடல்விடை யாரொற்றி யாரிடங் கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே. க

அணியே யணிபெறு மொற்றித் தியாகர்தம் அன்புறு சற், குணியேயெம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்றவமே, பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா, மணியேயென் கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. உ

பொருளே யடியர் புகலிட மேயொற்றிப் பூரணன்தன்
அருளே யெம்மாருயிர்க் காந்துணை யேவிண் ணவர்புகழுந்
தெருளே மெய்ஞ்ஞானத் தெளிவே மறைமுடிச் செம்பொருளே
மருளேத நீக்கு மொளியே வடிவுடை மாணிக்கமே. ௩

உன்னே ரருட்டெய்வங் காணேன் மனத்து முளைக் கப்படாப், பொன்னேயப் பொன்னற் புதவொளி யேமலர்ப் பொன்வணங்கு, மன்னே யெம்மாருயிர்க் கோருயி ரேயொற்றி யம்பதிவாழ், மன்னே ரிடம்வளர் மின்னே வடிவுடை மாணிக்கமே. ச

கண்ணேயக் கண்ணின் மணியே மணியிற் கலந்தொளிசெய்
விண்ணே வியனொற்றி யூரண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே
மண்ணேய நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. ரு

கோடா அருட்குணக் குன்றே சிவத்திற் குறிப்பிலரை
நாடாத ஆனந்த நட்பேமெய் யன்பர் நயக்குமின்பே

பீடார் திருவொற்றிப் பெம்மா னிடஞ்செய் பெருந்தவமே
வாடா மணிமலர்க் கொம்பே வடிவுடை மாணிக்கமே. சு

நாலே யெனுமறை யந்தங்க ளின்னமு நாடியெனைப்
போலே வருந்த வெளியொளி யாயொற்றிப் புண்ணியர்தம்
பாலே யிருந்த நினைத்தங்கை யாகப் பகரப்பெற்ற
மாலே தவத்திற் பெரியோன் வடிவுடை மாணிக்கமே. எ

கங்கைகொண் டோனொற்றி யூரண்ணல் வாமங் கலந்தருள்செய்
நங்கையெல் லாவுல குந்தந்த நின்னையந் நாரணற்குத்
தங்கையென் கோவன்றித் தாயரென் கோசொற் றழைக்குமலை
மங்கையங் கோமள மானே வடிவுடை மாணிக்கமே. அ

காமட் டலர்திரு வொற்றிநின் னையகன் கந்தைசுற்றி
ஏமட் டரையொடு நிற்பது கண்டும் இரங்கலர்போல்
நீயட்டு மேபட் டுடுக்கின் றனையுன்றன் நேயமென்னோ
மாமட் டலர்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. கூ

அனம்பொறுத் தான்புக ழொற்றிநின் னையக னங்கு மிழித், தனம்பொறுத் தாலொரு மாற்றாளைத் தன்முடி தன்னில்வைத்தே, தினம்பொறுத் தானங் கண்டுஞ் சின மின்றிச் சேர்ந்தநின்போல், மனம்பொறுத் தாரெவர் கண் டாய் வடிவுடை மாணிக்கமே. கo

ஓருரு வாயொற்றி யூரமர்ந் தார்நின் னுடையவர்பெண்
சீருரு வாகுநின் மாற்றாளை நீதெளி யாத்திறத்தில்
நீருரு வாக்கிச் சுமந்தா ரதனை நினைந்திலையே
வாருரு வார்கொங்கை நங்காய் வடிவுடை மாணிக்கமே. கக

முப்போது மன்பர்கள் வாழ்த்தொற்றி யூரெம் முதல்வர்மகிழ்
ஒப்போ தருமலைப் பெண்ணமு தேயென் றுவந்துநினை
எப்போதுஞ் சிந்தித் திடர்நீங்கி வாழ எனக்கருள்வாய்
மைப்போ தனையகண் மானே வடிவுடை மாணிக்கமே. கஉ

மீதலத் தோர்களுள் யார்வணங் காதவர் மேவுநடுப்
பூதலத் தோர்களுள் யார்புக ழாதவர் போற்றிநிதம்
பாதலத் தோர்களுள் யார்பணி யாதவர் பற்றிநின்றாள்
மாதலத் தோங்கொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

உன்னுந் திருவொற்றி யூருடை யார்நெஞ் சுவப்பவெழில்
துன்னு முயிர்ப்பயி ரெல்லாந் தழைக்கச் சுகக்கருணை
என்னுந் திருவமு தோயாம லூற்றி யெமதுளத்தின்
மன்னுங் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. கச

வாணா ளடைவர் வறுமை யுறார்நன் மணமக்கள்பொன்
பூணா ளிடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மையொன்றுங்
காணார்நின் னாமங் கருதுகின் றோரொற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வ முற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே. கரு

போற்றிடு வோர்தம் பிழையா யிரமும் பொறுத்தருள்செய்
வீற்றொளிர் ஞான விளக்கே மரகத மென்கரும்பே
ஏற்றொளி ரொற்றி யிடத்தா ரிடத்தி லிலங்குமுயர்
மாற்றொளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே.

இட்டார் மறைக்கும் உபநிட தத்திற்கு மின்னுஞ்சற்றும்
மொட்டாநின் பொன்னடிப் போதெளி யேன்றலைக் கெட்டுங்கொலோ
கட்டார் சடைமுடி யொற்றியெம் மானெஞ்ச கத்தமர்ந்த
மட்டார் குழல்மட மானே வடிவுடை மாணிக்கமே. கஎ

பன்னும்பல் வேறண்ட மெல்லாமவ் வண்டப் பரப்பினின்று
துன்னுஞ் சராசரம் யாவையு மீன்றது சூழ்ந்துமுன்னை
இன்னு மிளந்தை யழியாத கன்னிகை யென்பதென்னே
மன்னுஞ் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே. கஅ

சினங்கடந் தோருள்ளச் செந்தா மரையிற் செழித்துமற்றை
மனங்கடந் தோதுமவ் வாக்குங் கடந்த மறையன்னமே

தினங்கடந் தோர்புக ழோற்றியெம் மானிடஞ் சேரமுதே
வனங்கடந் தோன்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே. ககூ

வல்லாரும் வல்லவ ரல்லாரு மற்றை மனிதர்முதல்
எல்லாரு நின்செய லல்லா தணுவு மியக்கிலரேல்
இல்லாமை யாலுழல் புல்லேன்செய் குற்றங்க ளேதுகண்டாய்
மல்லார் வயலொற்றி நல்லாய் வடிவுடை மாணிக்கமே. உ0

தெருட்பா லுறுமைங்கைச் செல்வர்க்கு நல்லிளஞ் சேய்க்குமகிழ்ந்
தருட்பா லளிக்குந் தனத்தன மேயெம் அகங்கலந்த
இருட்பா லகற்று மிருஞ்சுட ரேயொற்றி யெந்தையுள்ள
மருட்பால் பயிலு மயிலே வடிவுடை மாணிக்கமே. உக

ஏமமுய்ப் போரெமக் கென்றே யிளைக்கி லெடுக்கவைத்த
சேமவைப் பேயன்பர் தேடுமெய்ஞ் ஞானத் திரவியமே
தாமமைக் கார்மலர்க் கூந்தற் பிடியென் தனிநடையாய்
வாமநற் சீரொற்றி மானே வடிவுடை மாணிக்கமே. உஉ

என்போற் குணத்தி லிழிந்தவ ரில்லையெப் போதுமெங்கும்
நின்போ லருளிற் சிறந்தவ ரில்லையெந் நீர்மையினுற்
பொன்போலு நின்னரு ளென்னே யெனக்கும் புரிதிகண்டாய்
மன்போ லுயரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

சற்றே யெனினுமென் னெஞ்சத் துயரந் தவிரவுநின்
பொற்றே மலர்ப்பதம் போற்றவு முள்ளம் புரிதிகண்டாய்
சொற்றே றறிஞர் புகழொற்றி மேவுந் துணைவர்தஞ்செம்
மற்றேர் புயத்தணை மானே வடிவுடை மாணிக்கமே. உச

அடியேன் மிசையெப் பிழையிருந் தாலு மவைபொறுத்துச்
செடியே தநீக்கிநற் சீரருள் வாய்திகழ் தெய்வமறைக்
கொடியே மரகதக் கொம்பே யெழிலொற்றிக் கோமளமே
வடியே ரயில்விழி மானே வடிவுடை மாணிக்கமே. உரு

கண்ணப்ப னேத்துநற் காளத்தி யார்மங் கலங்கொளொற்றி
நண்ணப்பர் வேண்டு நலமே பரானந்த நன்னறவே
எண்ணப் படாவெழி லோவிய மேயெமை யேன்றுகொண்ட
வண்ணப் பசும்பொன் வடிவே வடிவுடை மாணிக்கமே. ௨௬

மதியே மதிமுக மானே யடியர் மனத்துவைத்த
நிதியே கருணை நிறைவே சுகாநந்த நீள்நிலையே
கதியே கதிவழி காட்டுங்கண் ணேயொற்றிக் காவலர்பால்
வதியே ரிளமட மானே வடிவுடை மாணிக்கமே. ௨௭

தாயே மிகவுந் தயவுடை யாளெனச் சாற்றுவரிச்
சேயேன் படுந்துயர் நீக்கவென் னே யுளஞ்செய் திலையே
நாயேன் பிழையினி நாடாது நல்லருள் நல்கவரு
வாயேயெம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. ௨௮

நானே நினக்கடி யேனென் பிழைகளை நாடியநீ
தானே யெனைவிடி லந்தோ இனியெவர் தாங்குகின்றோர்
தேனே நல்வேதத் தெளிவே கதிக்குச் செலுநெறியே
வானோர் பொழிலொற்றி மானே வடிவுடை மாணிக்கமே.

சுந்தர வாண்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழற் பூவாய் கருணைக் கடைக்கணங்கா
அந்தர நேரிடைப் பாவா யருளொற்றி யண்ணல்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே. ௩௦

பத்தர்தம் முள்ளத் திருக்கோயில் மேவும் பரம்பரையே
சுத்தமெய்ஞ் ஞான வொளிப்பிழம் பேசிற் சுகாநந்தமே
நித்தநின் சீர்சொல எற்கருள் வாயொற்றி நின்மலருன்
மத்தர்தம் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. ௩௧

பூவாய் மலர்க்குழற் பூவாய்மெய் யன்பர் புனைந்ததமிழ்ப்
பாவாய் நிறைந்தபொற் பாவாய்செந் தேனிற் பகர்மொழியாய்

காவா யெனவயன் காவாய் பவனுங் கருதுமலர்
மாவா யெழிலொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. ௩௨

ஆரணம் பூத்த அருட்கோ மளக்கொடி யந்தரிபூந்
தோரணம் பூத்த எழிலொற்றி யூர்மகிழ் சுந்தரிசற்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநங் கௌரியென்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே. ௩௩

திருவல்லி யேத்து மபிடேக வல்லியெஞ் சென்னியிடை
வருவல்லி கற்பக வல்லியொண் பச்சை மணிவல்லியெங்
கருவல்லி நீக்குங் கருணைம் பகவல்லி கண்கொளொற்றி
மருவல்லி யென்று மறைதேர் வடிவுடை மாணிக்கமே. ௩௪

கற்பதுங் கேட்பது மெல்லாநின் னற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதங் காணும் பொருட்டென எண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாயவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதஞ் சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

நின்று லெனக்குள வெல்லா நலனு நினையடைந்த
என்று லுனக்குள தென்னைகண் டாயெமை யீன்றவளே
முன்றல் வருக்கரு ளொற்றியெம் மான்கண் முழுமணியே
மன்னுன் மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே. ௩௬

கூறுத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடுமென்
றேறுத விண்ணப்பஞ் சற்றேனு நின்றன் றிருச்செவியில்
ஏறுத வண்ணமென் னெற்றித்தி யாக ரிடப்புறத்தின்
மாறு தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே. ௩௭

ஓயா இடர்கொண் டுலைவேனுக் கன்பர்க் குதவுதல்போல்
ஈயா விடினுமோ ரெள்ளள வேனு மிரங்குகண்டாய்
சாயா அருள்தருந் தாயே யெழிலொற்றித் தற்பரையே
மாயா நலமருள் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. ௩௮

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் றுண்மலர் போற்றிநின் றண்ணளி வாழிநின்சீர்
வாழியென் னுள்ளத்தில் நீயுநின் ளொற்றி மகிழ்நருநீ
வாழியென் னுருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. ௬௯

திருவதிகைத் திருவீரட்டானம்

பெரியநாயகியம்மை

உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டற்கே
பிரிய நாயகி பேரருள் நாயகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம். ௭0

வேறு

உலகந் தழைக்க வுயிர்தழைக்க
வுணர்வு தழைக்க வொளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடியே
உள்ளத் தினிக்குந் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே
செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கும் மலைப்பெண் மணியேமா
தேவி யிச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியையின்பம்
வழங்கு மாதி பரையென்ன
வயங்கு மொருபே ரருளேயெம்
மதியை விளக்கும் மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை
ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண்
அரசே என்னை யாண்டருளே. ௭௧

தன்னே ரறியாப் பரவெளியிற்
சத்தாஞ் சுத்த அநுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்குந்
தாயே யெமக்குத் தனித்தாயே
மின்னே மின்னே ரிடைப்பிடியே
விளங்கு மிதய மலரனமே
வேதம் புகலும் பசுங்கிளியே
விமலக் குயிலே யிளமயிலே
பொன்னே யெல்லாம் வல்லதிரி
புரையே பரையே பூரணமே
புனித மான புண்ணியமே
பொற்பே கற்ப கப்பூவே
அன்னே முன்னே யென்னையத்
தமர்ந்த அதிகை யருட்சிவையே
அரிய பெரிய நாயகிப்பெண்
அரசே யென்னை யாண்டருளே. ௪௨

கலைமகள்

அன்பர்பா னீங்காவெ னம்மையே தாமரைமேற்
பொன்பொருவு மேனியயன் பூவின்—மன்பெரிய
வாக்கிறைவி நின்றாள் மலர்ச்சரணம் போன்றேனைக்
காக்கக் கடனுனக்கே காண். ௪௩

திருக்கண்ணமங்கை

இலக்குமி

உலகம் புரக்கும் பெருமான்றன்
உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப
வுருவே யெல்லாம் உடையாளே

திலகஞ் செறிவா ணுதற்கரும்பே
தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே
தித்தித் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருளளித்த
வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம்
வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி
தடங்கண் திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரணமிது
தருணங் கருணை தருவாயே. சச

வேறு

பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாந் தீர்ந்தே னருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த நித்திரைசெய் கின்றேனே. சரு

சிவஞான சுவாமிகள்

குளத்தூர்
அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்

செங்கீரைப் பருவம்

மணிதுற்ற தவிசெனப் பருமணிப் பருமம்
வயங்குமடி மீதிருத்தி
மதிக்கடவுள் தன்மனை யெனக்குலாய்த் தன்னமிழ்தம்
வாக்குவ தெனத்திம்பயம்
பணிலத்தின் வாய்க்குமுத மூட்டிமற் றிதுமாசு
பரியாது சாலாதெனப்
பாரிழைத் தொருபொட்டு நுதன்மதிக் கிட்டுப்
பசுங்கழையின் மஞ்ஞைநின்றுங்
கணிபெற்ற புயமே லணைத்திரு மதித்தேவர்
அளவளாய்க் குழீஇயதேய்ப்ப
அழகிய முகத்துமுத் தாடியெழின் மேனைசீர்
ஆட்டமகிழ் கூர்ந்துகொடியேம்
திணிவைத்த நெஞ்சங் கரைக்குமமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே.

தாலப் பருவம்

பாரத வெண்புணரி மீதோன் வேதா மாதேவர்
பணிந்து தொண்டுசெய வேலே சேலே போலாடுங்
கருங்க ணுந்துமளி யீவாய் பாவாய் தாவாது
கறங்கு வண்டளக மானே தேனே யேனோர்தம்

புரங்க டந்தநகை வாயார் தூயார் சேயார்பாற்
புணர்ந் திடும்பசிய தோகாய் காவாய் நீகாவென்
றிரங்கு மன்பரக வாழ்வே தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ. ௨

சப்பாணிப் பருவம்

ஐவகைச் சுத்திபு மமைத்துவான் கம்பைநதி
அருகன்பு பூப்பமலரால்
அஞ்சலி நிறைத்துமே ஞெக்கிமுக மதியினெதிர்
அல்கிய தெனக்குவிந்து
மெய்வகைத் துவாதசாந் தத்தலத் தானந்த
வெள்ளப் பெருஞ்சோதியை
விரிமலர்த் தவிசாக வேற்றுமுன் போலென்ன
மீண்டுங் குவிந்திழிந்தாங்
குய்வகைச் சிவலிங்க நாப்பணு வாகித்தவ்
வும்பனய னச்சுடரெதிர்
உறக்குவிந் தலர்விரைவு மானமுத் திரைகொடுத்
துலவாது பூசைமுற்றுஞ்
சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே. ௧

அருள்பெறு மடியவர் விழியளி சுற்று மணத்தேனே
அவனியி னிடையற மெவையும் வளர்த்த சுவைப்பாகே
திருமல ரமரர்கள் சொரிதரு பத்ம பதத்தாயே
தெளிமறை நெறியின ருளமொளிர் வித்த சுகப்பேறே
முருகவிழ் மதுவழி நறுமலர் மொய்த்த குழற்கோதாய்
முனிவரர் மறையவ ரடியர் பழிச்சு குளத்தூரின்
இருமையு முதவிடு மடமயில் கொட்டுக சப்பாணி
இமகிரி தரவரு முமையவள் கொட்டுக சப்பாணி. ௨

முத்தப் பருவம்

பெருகா ரமிழ்தரு ளொளிசேர் மதியெழில்
　　பெற்ற நுதற்கொடியே
　பிறவா அருள்நெறி தருவா யெனுமவர்
　　பெட்பி னுளச்சுவையே
மருவார் தகரமும் அளிவீழ் மலரும்
　　மணத்த குழற்றிருவே
　மதியா தவருள மருவா திருளென
　　வைத்த மடப்பிடியே
உருகா நெறியெம துளமா சறவும்
　　ஒறுக்கும் அறக்கடலே
　உருவா யளவரும் அருவாய் நிறைபொரு
　　ளுக்கொரு வைப்பிடமே
முருகார் பொழிலணி கமலா கரமயின்
　　முத்த மளித்தருளே
　முதுநான் மறையறி வறியா வடிவினள்
　　முத்த மளித்தருளே. ௫

வாரானைப் பருவம்

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித்
　　தீட்டா நிலைமைத் தெனவுலகில்
　தெறிக்குங் காழித் திருஞானச்
　　செம்மற் குழவிக் கருள்ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம்
　　பெரிய மலைவா யுறுத்துமென்றே
　பெருமான் றனையுங் குழைத்தவலிப்
　　பெற்றி யறிந்து தடுத்தோபூங்

கையி லிலகு நகக்குறிபற்
கதுவ நோமென் றேதீம்பால்
கறந்து கொடுத்தா யெனச்சகிமார்
கனிந்து பாட நகைமுகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண்
வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே. ௬

அயில்கண் டனையஞ் சலித்தேத்தும்
அன்னை வருக பெருங்கருணை
யாழி வருக தீவினையெம்
ஆவித் துணையே வருகவிடந்
துயில்கண் டனையம் பலத்தாட்டுஞ்
சுடர்பொற் கொடியே வருகஇளஞ்
சுகமே வருக நறுங்குதலை
தோற்றுங் கிளவி யெனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும்
பசுங்கோ கிலமே வருகவென்றும்
பருகத் தெவிட்டாச் சுவையமுதப்
பாவாய் வருக பசுந்தோகை
மயில்கண் டனைய இளஞ்சாயல்
மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே. ௭

அம்புலிப் பருவம்

வணங்குமுறை யாற்றனது திருவுளப் படிநிற்கு
மாந்தர்க்கு மலதிரோத
மாயேய காமிய மருட்பிணி யவிழ்த்துநான்
மறைமுடிவு பெட்டாததோர்

குணங்குறி கடந்தபே ரானந்த வெள்ளக்
கொழுங்கடல் திளைத்தாடிடக்
கொடுத்தருளும் வள்ளன்மை நிற்கமற் றுலகினுங்
குளிர்தூங்க எண்ணுன்கறம்
இணங்குவே தாகம வழித்துறை வழாவகை
இயற்றியது காணுயலை
ஈங்குநீ வரினினது கறைபோக்கி வேண்டியதும்
ஈந்தருள் கொழித்தருளுவாள்
அணங்குகொண் டந்தரத் தலையாதெம் அம்மையுடன்
அம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. அ

அம்மானைப் பருவம்

ஒழுங்குபடும் அண்டகோ டிகள்தொறு நிலாவுறாஉம்
ஒண்கமல மாநிதிகளும்
ஒலிகொண்ட வெண்சங்க நிதிகளுஞ் சார்ந்தவர்க்
குதவுநின் கரநோக்கிவான
செழுங்கதியு முய்த்தளித் திடுநிதிய மீதெனத்
தேர்ந்துவந் தளவளாவித்
திருவாய்ந்து விடைகொண்டு தம்பதி குறித்துமேற்
சேண்வழி நடத்தலேய்ப்பக்
கொழுங்கதிர் பரப்பிக் கவின்றசெம் மணியாற்
குயிற்றுமம் மனைகள்பலவுங்
குளிர்நிலாக் கான்றுவெள் ளொளிவீசு முத்தங்
கொழிக்குமம் மனைகள்பலவும்
அழுங்குமணி மேகலைச் சிற்றிடை யெடுத்தெடுத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குக மலாகர புரத்தலைவி
அம்மானை யாடியருளே. க

நீராடற் பருவம்

விற்புரு வங்குழை யக்கரு நீல விழித்துணை செங்குவளை-வெல்லநின் மேனி தழைப்பமு கேறென வீங்கிய நீர்குடையா, நிற்புகழ் தெய்வ மடந்தையர் மீதினில் நீள்சிவிறித்துளையான்-நிரைத்த குறுந்துளி தம்முட லெங்கு நிரத்தலும் வானவர்தங், கற்புரை தோள்கள் புதைத்தன ராடக் கடவுள் சடாமகுடக்-கங்கை யவன்றலை யைந்தொடு மாடக் காசினி கொண்டாடப், பொற்பு மிகுங்கம லாகரி பாலிப் புதுநீ ராடுகவே-பூரண ஞான புராதனி பாலிப் புதுநீ ராடுகவே. ௧௦

ஊசற் பருவம்

அண்டப் பரப்பெங்கு மண்டிப் படர்ந்தபே
ரானந்த வெள்ளம்வாழ
அருட்சரியை கிரியைசிவ யோகமொடு ஞானமெனும்
அதிகசிவ தருமம்வாழக்
கண்டவர்க் கினியநஞ் சோமேசர் வாழநின்
கட்கடைக் கருணைவாழக்
காசினி யொருங்குசிவ பத்திகுரு பத்திசங்
கமபத்தி செய்துவாழ
வெண்டிருப் பூதியுய ரக்கமணி வாழமெய்
விளக்குமஞ் செழுத்துவாழ
வேதநெறி சைவநெறி வாழக் குளந்தைநகர்
மேன்மேற் செழித்துவாழப்
புண்டர நுதற்றொண்டர் தங்குழாம் வாழநீ
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. ௧௧

வீரை கவிராஜ பண்டிதர்

ஆனந்த லகரி

சிவமெ னும்பொருளும் ஆதி சத்தியொடு சேரின் எத் தொழிலும் வல்லதாம், இவள்பி ரிந்திடின் இயங்கு தற்குமரி தரிதெ னுமறை யிரைக்குமால், நவபெரும் புவனம் எவ்வ கைத்தொழில் நடத்தி யாவரும் வழுத்துதாள், அவனி யின் கணொரு தவமி லார்பணிய லாவ தோபாவ லாவதோ. க

தேவெ னப்புகழ அதில்நி மிர்ந்துநிகர் செப்பு வார்அபய வரதமாம், பாவ கத்தபின யத்தோ டுற்றகை பரப்பி யென் பயம் ஒறுக்குமே, யாவ ருக்குமஃ தரிது நின்பதம் இரப்ப யாவையு மளிக்குமால், மூவ ருக்குமொரு தாவ ரப்பொரு ளென் மூல மேதமையு ஞாலமே. உ

மேகலை பொங்கம தாசல கும்பமெ னுமுலை கண்டிடை சோராநீர், மாகவ ளங்கெழு நாணிறை யம்புலி வாண்முக மம்புவி லேடார்போ, தேகநெ டுங்கழை பாசமொ டங்குசம் ஏர்பெற வந்தருள் காபாலி, நீகம லந்திகழ் தாள்வரு டென் றான் நீர்மையின் விஞ்சிய கோமாதே. ங

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை யழகி ருந்த வூரிலிருந் தறியா னேனும், உறக்கருணை கொழிக்கு முன தமுத வாரி யூடணுகின் அவனையர மகளி ரெல்லாம், நறைக்குழலுஞ் சரிந்திடவுத் தரீயஞ் சோர நாணழிய வளை சிதற வுடுத்த ஆடை, புறத்துவிழ மயலொடும்பின் தொடர்வ ரென்றாற், பொற்கொடிநின் புதுமையெவர் புகழ வல்லார்.

மொழிவ துன்செப முத்திரை பாணியின் முயல்வ தெங்கு நடப்பன கோயில்சூழ், தொழில ருந்துவ முற்றமு

ஞகுதி துயில்வ ணங்கல் களிப்பன யாவுநீ, ஒழிவ றுங் களி யென்செயல் யாவையும் உனது நன்செய் பரிச்செய லாகவே, அழிவ றும்பதம் வைத்தருள் பேரொளி யளிவி ளைந்து களிப்பெழு நாதமே. ரு

மனமுநீ வெளியுநீ வளியுநீ கனலுநீ மறிபுனலுநீ புவி யுநீ, நினையில்நீ பரமற வளர்ந்தொளி பரந்துவிடின் நீயன்றி யொன்று முளதோ, வுனதுமா ஞானவா னந்தவுரு வைப்பு வன வுருவென வகுத்த ருளவோ, அனையுமாய் மகவுமா மாறுபோல் நீசத்தி யருணவடி வாய துமையே. சா

சௌந்தரிய லகரி

வரிவிழிச் செம்மை வெண்மை வனப்புறு கருமை மூன்றும், எரிதெறு கற்ப காலத் திறந்தமுப் பொருளுந் தோன்றுங், கருவெனக் குணங்கள் மூன்றின் காரண மென்னப் பெற்றால், அருமறைப் பொருளே யுன்றன் அரு ளலா துலக முண்டோ. எ

திருமகள்தன் சீறடியால் துவண்டுமெதிற் செம்பஞ்சாற் செங்கேழ் பெற்று, மருமுளரி யெழில்படைத்த திதுவோ நம் மியற்கையெதிர் மலர்வதென்றே, இருகரமும் நகைத்த நகை யொளியையுன தெழிலுகிரென் றிறைஞ்சி நாளும், அருமறைகள் வழுத்துகின்ற ததிசயமோ பேதைமையோ அன்போ அம்மே. அ

நித்தமொரு பக்கமயில் நிற்களிறுன் வட்டமுலை நிற்கு மெழி லிற்ற னதுசீர், மத்தகமெ னத்தனில யிர்த்தொரு கரத்தைமுடி வைத்துறவு றத்த டவுமால், முத்தமுலை செப் புவதெ னக்களிறு பிற்குமரன் முற்புதல்வர் துய்த்த அமு தால், அத்தலைமை பெற்றனர திற்றிவலை கிட்டினுமென் அற்பவுயிர் முத்தி பெறுமே. கூ

உளமகிழ் மகிழ்நர் சென்னி யுறுநதி விளக்க மாயோன்
கிளர்முடிப் பதும ராகக் கேழொளி செம்பஞ் சேய்க்கு
முளரிநின் பதங்கள் வேத முடியுறப் பதித்த தவ்வா
றெளியவன் தலைமேல் வைக்க இரங்குவ தென்று தாயே.

அன்பின ரிரப்பதி னிரட்டியருள் செய்யும்
நின்பத தருத்துணர் நிறைந்தொளிர்வ னப்பாம்
இன்பமுறு தேன்முழுகும் என்னிதய வண்டின்
தன்புளக மெய்க்களி தழைக்கவருள் தாயே. கக

மூவர்ம கேசன் முடிகொளு மஞ்சத் தெழிலாயும்
மேவிய படிகத் தனதொளி வெளிசூழ் திரையாயும்
ஓவறு செங்கேழ் விம்பம தின்பத் துருவாயும்
பாவைநின் அகலா இறையொடு நின்னைப் பணிவாமே. கஉ

வேதியர்கள் அயன்நாவில் விஞ்சைமக ளென்றுஞ்
சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலை யென்றும்
நாதரிடத் தரிவையென்றும் நாட்டுவரெண் ணடங்கா
ஆதிபரன் மூலபரை யாமளையுன் மயக்கால். கரு

சேமநிதி யேயமுதே தேனேநற் குணக்கடலே
யாமளையே யன்பர்மனத் திருந்துமுறைக் கடங்காத
கோமளமே யம்மேநின் கோகனதத் தாள்வழுத்தும்
மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வாயால். கச

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொண் டாலாத்தி சுழற்ற லென்கோ, சீதமதிக் கவன்நிலவி னெழுகுசிலைப் புனல்கொடுப சரிப்ப தென்கோ, மோதியமைக் கடல்வேந்தை யவன்புனலான் முழுக்காட்டு முறைமை யென்கோ, நீதருசொற் கவிகொடுனைப் பாடியுன தருள்பெறுமென் னீதி யம்மே. கரு

அபிராமிபட்டர்

அபிராமியந்தாதி

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. ௧

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. ௨

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றைவார்சடை மேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. ௩

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. ௪

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகிடன் றலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே. ௫

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்

திருத்தன பாரமும் ஆரமுஞ் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. சூ

கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. எ

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும் [லா
ஒளியே யொளிரு மொளிக்கிடமே யெண்ணி லொன்றுமில்
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே. சூ

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
அதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. கo

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. கக

வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே.

கோடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே [ளே.
அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள் க௩

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம்பணிந்தபின்னே க௪

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல்லாநின்னருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருளேதென்றுசொல்லுவதே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. க௬

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. கஎ

இழைக்கும் வினைவழி யேயடுங் காலன் எனைநடுங்க
அழைக்கும்பொழுதுவந் தஞ்சலென்பாய் அத்தர்சித்த மெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே [தே.
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு

கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
தாய்அகி லாதி யுடையாள் சரணம் அரணநமக்கே. உ௦

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. உக

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில முந்திசை நான்குங் ககனமுமே. உ௩

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. உச

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே.

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்திரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

பரமென் றுனையடைந் தேன்தமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியாதவுணர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே.

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் துணைவரும் நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக இனியெனக்குப்

பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. ௯௨

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக அடிமைகொண் டாயினி யாரொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. ௯௪

நன்றே வருகினுந் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. ௯௫

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. ௯௬

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

வச்சிரபஞ்சரமென்னும்

சத்திகவசம்

[தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருந்த துர்க்க னென்னும் அவுணனை, உமாதேவியார் சங்கரித்து அவ்விடரை நீக்கியதுகண்டு, அத்தேவியை வணக்கஞ்செய்து துதிசெய்தது இக் கவசமென்றறிக.]

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளி னோடுந்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளிலாகம்
எங்கணுங் காக்க செய்ய வேங்தெழி லுருத்தி ராணி
தங்குமெண் டிசையு மன்பு தழைத்திட இனிது காக்க. ௧

கோன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவ நாளும் பரிவொடும் உமையாள் காக்க
என்னையாள் முக்க ணீச னிறைவிகண் ணிணைகள் காக்க. ௨

வயமிகும் இமய வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசயை மேல்கீ ழிதழினைச் சிறந்து காக்க
வயிலுடைச் சுருதி தூய வஞ்செவி காக்க தண்ணென்
பயின்மல ருறையுஞ் செல்வி பல்லினை யுவந்து காக்க. ௩

சண்டிமென் கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகும்
ஒண்டொடி நன்னாக் காக்க விசயைமங் கலைமற் றொவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியா யனியெஞ் ஞான்று
முண்டக மலரிற் றாய முகத்தினைச் சிறந்து காக்க. ௪

காளமுண் டிருண்ட நீல கண்டிமென் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி சுவற்புறங் காக்க கூர்மி

சீளொளிச் சந்தி காக்க வயிந்திரி நெறியி னோடுந்
தோளிணை காக்க பத்மை துணைமல ரங்கை காக்க. ௫

கமலைகை விரல்கள் காக்க விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுண் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ்
எமதிரு வாகு மூலங் காக்கவா னவர்க ளேத்த [செல்வி
அமிர்தல கரிநா ஞானு மகன்மணி மார்பங் காக்க. ௬

தரித்திரி யிதயங் காக்க தயித்தியர்ச் செகுப்போண் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினி லிறைமை பூண்டோள்
திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியி னுந்தி காக்க வசைவளர் முதுகு காக்க. ௭

கருதரு விகடை காக்க கடிதலம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
அருள்தர வரும பாய கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ் சிறப்புடைக் குறங்கு காக்க.

லளிதைமென் முழந்தாள் காக்க வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்திற் செல்வோ ளணிகெழுபுறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி யுக்கிரி யுவந்து காக்க. ௯

தலத்துறை மடந்தை யுள்ளங் காலிணை காக்க தண்ணென்
மலர்த்திரு மனையைக் காக்க வயங்குகேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை யொழிவ றாது
நலத்தகு மக்கள் தம்மை நன்குறக் காக்க வன்றே. ௧௦

உயர்சனு தனியெஞ் ஞான்று மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவு மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி யினிது காக்க.

சற்கதி பிரதை நல்லோ ரியைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரி னீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இற்புற மதனி லோங்கு சர்வாணி காக்க வென்றுப்
பொற்றரு மலர்கள் தூவிப் புங்கவ ரேத்தி னுரே. கஉ

இந்த வச்சிரபஞ்சரத்தை யாவர் ஓதினாலும், அவர்களுடைய உடலிலுண்டாகிய வெப்புநோ யொழியும். எட்டுத்தரம் நீரில் அபி மந்திரித்து அதனை உட்கொண்டால், வயிற்றிலே பொருந்திய குன்மஞ் சூலை முதலிய நோயனைத்தும் நீங்கும். இரவில் வழிநடக்கும் போது ஓதினால், பூதம்பேயிவைகள் தொடரமாட்டாவாம். பிள்ளையைப் பெறமாட்டாமல் வருத்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்து ஓதினாலும், அல்லது நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தாலும், விரைவிலே வருத்தநீங்கிப் பிள்ளைகளைப் பெறுவார்கள். சிறு பிள்ளைகளுக்கு நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தால் நோய்கள் நீங்கும். இதை யாவரோதினாலும் அவர்களை உமாதேவி காப்பாற்றுவாள்.

சிவபுராணங்கள்

பராசக்தி வணக்கம்

திருவிளையாடற் புராணம்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத் தொடித்தோள் போற்றி, கரும்புருவச் சிலைபோற்றி கவுணி யர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி, இரும்புமனங் குழைத் தென்னை யெடுத்தாண்ட அங்கயற்க ணம்பி ராட்டி, அரும் புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி. க

அண்டங்க ளெல்லா மணுவாக அணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங்கரி யாயி னானும்
அண்டங்க ளீன்றாள் துணையென்ப ரறிந்த நல்லோர். உ

பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி, இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தாழாக், கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண் டியன்மகள் போற் கோலங் கொண்ட, அங்கயற்க ணம்மை யிரு பாதப்போ தெப்போதும் அகத்துள் வைப்பாம். ௩

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று முடி புனைந்து செங்கோ லோச்சி, முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு நந்திகண முனைப்போர் சாய்த்துத், தொழு கணவற் கணிமணமா லிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிச் செல்வந், தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கம லந் தலைமேல் வைப்பாம். ௪

அருணகிரி புராணம்

பண்ணார்மறை பயின்றேநமக் குறுதிப்பெரும் பயனை
விண்ணாடரும் பணிந்தேத்திட விதியாலருள் விமலை
பெண்ணாணலி யெனும்பிள்ளைகள் பெற்றேயவர் தம்மால்
உண்ணாமுலை யுமையாள்பதம் பணிவாமுளத் துகந்தே. ௫

சேது புராணம்

தண்ணெனவும் வெச்செனவுந் தந்து சாயாத் தகை பயின்று விடநீக்கித் தலைவற் கென்றும், உண்ணமுதந் தனை யுதவி யிமைய மேரு வுயர்சிகர மந்தரத்தை யொருவிச் சேர்ந்துங், கண்ணுதலை விளர்ப்புறலாற் கயிலை யெள்ளிக் கௌணியர்க்குத் தமிழ்சுரக்குங் காட்சி யாலே, வண்ண முலை மலயமலை மானுங் கன்னி மலைவளர்கா தலிமலர்த் தாள் மனத்துள் வைப்பாம். ௬

திருப்பரங்கிரிப் புராணம்

பொழியருவி யெனவொழுகக் கருணைவெள்ள மடை திறக்கும் பூங்கண் மாதை; மழலையமு தம்பொழியப் பேசு மொரு பசுங்கிளியை மருவி நாளும், பழமறைக ளோலிடவே பதம் பெயர்க்கும் பொலங்கொடியைப் பார்க்குந் தோறும், அழகொழுக நின்றவளைப் பரங்குன்றி லாவுடை யை யகத்துள் வைப்பாம். ௭

திருவாரூர்ப் புராணம்

அறந்தழையக் கலைத்தெரிவை வனப்பெய்தச் சசி யெனும்பே ரரிவை வாழ, நிறங்கெழுபூ மடந்தையொடு நிலமடந்தை மங்கலத்தி னிறைந்து மல்கப், பிறங்குமுயிர்த் தொகையனைத்துங் களிகூரத் தவம்புரியும் பீடு சான்ற, சிறந்தகம லாலயநா யகிசெம்பொற் சேவடிகள் சென்னி சேர்ப்பாம். ௮

காசிகாண்டம்

அலகிலாக் கருணை யென்னு மந்தளி ரீன்று தொல்லை, உலகெலாம் பூத்துக் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் சென்னி, மலையினிற் படர்ந்த பச்சை மரகதக் கொடியை ஞானக், கலையமு தொழுகு தீஞ்சொற் கனியினைக் கருத் துள் வைப்பாம். ௯

வாயுசங்கிதை

கட்டழ குடைய முகத்தினுக் குடைந்த கதிர்மதி கண் டுறச் சாம்பு, மட்டவிழ் கமல நின்முகத் தெழிலை வாய்க்க வும் பெறுங்கொலோ வென்று, விட்டலர் கடுக்கை நறும லர்த் தொடையல் புனைந்தவன் வியந்தெடுத் துரைப்ப, வட் டவாண் முகஞ்சாய்த் திளநகை புரியு மலைமகள் தாள்வணங் கிடுவாம். ௧௦

மச்ச புராணம்

பூரணசிற் பரமான மெய்ப்பொருளி னிடப்பாகம் பொருந்தி யாதி, காரணசித் துருவாகி யனைத்துலகும் விளக் கொளியாய்க் கருணை பூத்த, ஆரணவித் தாகிமல ரயன்மு தலா முலகமெலாம் அருளி னீன்ற, வாரணவு களபமுலை வடிவுடைய கௌரிபதம் மனத்துள் வைப்பாம். ௧௧

தக்ஷிணகைலாச புராணம்

பார்புரந்த திருவடியும் அடியவர்க ளீடேறும் படிக்குப் பைம்பொற், றார்புரந்த வடிவழகு மழகெழுமங் கலநாணுந் தயங்குஞ் சோதிக், கார்புரந்த கருங்குழலும் வெண்ணகை யுஞ் செவ்விதழுங் கருணைக் கண்ணுஞ், சீர்புரந்த பிடி யன்ன மென்னடையம் பிகைபாதஞ் சிந்தை செய்வாம். ௧௨

விருத்தாசல புராணம்

பச்சைமலை பவளமலை தனிற்றோற்றம் போலப் பரி வுடைய திருவடிவும் அம்மலைமே லுற்ற, மெச்சுமதித் திரு

முகமும் பொய்ச்சதிரு விடையும் விழிமூன்றுங் காரநான்கும் பெரியநா யகியார், கச்சிருந்த முலைத்தடமும் அமுதவாக்குங் கருங்குழலும் வெண்ணகையுஞ் செய்ய வாயும், நச்சுமடி யவர்பிறவி யறுக்குந் தாளும் நைந்துருகிப் புந்தியினிற் சிந்தை செய்வாம். ௧௩

திருவையாற்றுப் புராணம்

வளங்கிளரும் அண்டங்க ளனந்த கோடி வாழுமுயிரேழ்கடலின் மணலு மொவ்வா, உளங்குளிர வுயர்ந்தோர்க்குந் தக்க தேயா வுயர்துணையில் லாவுயிர்க்குந் தக்க தேயாத், தளர்ந்தொருவ ருண்டியால் வருந்தா வண்ணஞ் சைவநாயகனையா றுடைய நாதன், அளந்தபடி யிருநாழி நெல்லுங் கொண்டே அறம்வளர்த்த அன்னைபதஞ் சென்னி வைப்பாம். ௧௪

சீகாளத்தி புராணம்

பூமக ளிறைஞ்ச நெற்றிப் புதுமணித் திலகந் தோய்ந்து
தாமரை நகுமு கத்தேர் தான்பெறப் பணிக ளங்க
மாமதி புரையு மங்கேழ் வயங்குகிர் மலர்த்தாட் குன்றக்
கோமக ளருள்ஞா னப்பூங் கோதையை வணக்கஞ் செய்வாம்.

செவ்வந்திப் புராணம்

பனிகொள் வரையிற் பிறந்தபிடி பாகு ரிடத்திற் படர்ந்த கொடி, முனிவ ரிமையோர் மகிழஅறம் முப்பத்திரண்டும் வளர்த்தருளும், வனிதை வடிவே லனைப்பயந்த மடந்தை மட்டு வார்குழலாள், இனிய பதமா மிருபோதுந் தலைமேற் றரிப்பா மிருபோதும். ௧௬

அருணசல புராணம்

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந் தொழுகுமிரு கடைக்கண் ணாளை, மூரலிள நிலவொழுகப் புழுகொழுக

அழகொழுகு முகத்தி ஞானை, வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத மருங்கு லாளைச், சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா முலையாளைச் சிந்தை சேர்ப் பாம். ௧௭

தீர்த்தகிரி புராணம்

அன்னையென வுலகமெலா மளித்திருந்துங் கன்னிகை யாம் அசல மானை, என்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட தீர்த்தமலை யிறையோன் பாகந், தன்னையக லாமயிலை மயி லோனுக் கமுதுதவுந் தனத்தி னானைப், புன்னைநறுங் குழலி வடி வழகிநா யகியையன்பாற் போற்றுவோமே. ௧௮

கந்தபுராணச்சுருக்கம்

மாற்கரிய செம்பதத்தோன் தேவி யாகி வல்வினையேன் எனதாவிக் காவி யாகி, மேற்கருணைத் திருவுருவ முடை யா ளாகி வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய் நின்ற, சேற்கருங்கட் டளவநகைக் களபக் கொங்கைச் சிற்பரை யிங் கெனையாளும் உமையாள் செம்பொற், காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக் கைக்கமலங் குவித்திருந் துங் கமலந் தீர்வாம். ௧௯

காஞ்சிப் புராணம்

ஊன்பிலிற்று மழுவாளி கலவிதனி லொண்ணுதெ தன் ரேர்ந்து நஞ்சந், தான்பிலிற்றும் பாப்பணியை நீப்பவுங் கார் வண்டினங்கள் ததைந்து மூசத், தேன்பிலிற்று நறுங் கடுக்கைத் தெரியலைப்பாம் பெனமருண்டத் தெரிய னுறுங், கான்பிலிற்றத் தெருண்டணையுங் காமக்கோட் டத்துமை யைக் கருத்துள் வைப்பாம். ௨௦

கருக்காமக் கோட்டிமிர வினையனைத்து மொருங்கெய் திக் கலகஞ் செய்யுந், தருக்காமக் கோட்டியெலா மற

வெறிந்தா மினியென்றுந் தகைசா லன்பு, சுருக்காமக் கோட்டினைச்சே யரைகரங்கொண் டார்க்குழலைச் சுவடு நல்குந், திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ தெப்போதுஞ் சிந்திப் பாமால். உக

விநாயக புராணம்

சத்தியாய் விந்து வாய்மனோன் மணியாய்த் தயங்கிய மகேசையா யுமையாய், நித்தில வடந்தாழ் முகிழ்முலைத் திருவாய் நெடும்புகழ் வாணியாய் வேறாய், எத்திற மிறைவ னின்றன னவனுக் கியைதர அத்திற நின்று, மெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து விளங்குபூ ரணியையேத் தெடுப்பாம். உஉ

திருத்தணிகைப் புராணம்

சீரணி சிருக்கு மணிவடஞ் சங்கு திகிரிசூ லப்படையிலைவேற், போரணி பாச மங்குசங் கழைவில் பூங்கணை வேறுவே றணியா, ஆரணன் மாயன் அரன்இப முகத்தன் அனங்கனென் றிவர்தொழிற் கெல்லாங், காரண மாதல் தெளித்தருள் கொழிக்குங் கன்னியை யுன்னியேத் தெடுப்பாம். உ௩

பேரூர்ப்புராணம்

கங்கைநதி சடைக்கரந்த கணவனு ருருக்கலந்த தனக்கே யல்லால், துங்கமணிக் கோடிரண்டா யிரம்படைத்த கரியெவர்க்குந் தூண்டன் முற்று, தங்கநெடும் புவனத்தென் றமைந்தனள்போற் பாசமொடங் குசங்கை யேந்து, மங்கலமிக் கருள்பேரூர் மரகதவல் லியினிருதாள் வனசம் போற்றி. உச

திருவானைக்காப் புராணம்

எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந் திடுந்துயர மெனைத்து நீங்க, மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந்

தீயிறந்து வளியி னோடு, விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித் தனதகட்டின் விரவ வைத்துக், கண்ணிறைந்த கவின்காட்டு மகிலாண்ட நாயகியைக் கருத்துள் வைப்பாம்.

பூவாளூர்ப் புராணம்

மணியொளியும் மலர்மணமும் வயங்கிரவிக் கதிருமதிக் கலையும் போலத், துணிவருளுஞ் சிவபெருமா னுடன்பிரி யாத் தனதியல்பைத் தொல்லை யான்மாப், பிணியொருவ எடுத்தருளுந் திருமேனி யிடத்துமிகப் பிறங்கக் காட்டி, அணிவிரவி வீற்றிருக்கும் பராபரையை யெஞ்ஞான்றும் அகத்துள் வைப்பாம். உகு.

திருச்செந்தூர்ப் புராணம்

ஊடலி னுடைந்த சங்க மொளிர்சடைப் பிறைவெண் கீற்றின் மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க வேடுறு தளவப் போதி னிளநிலா முறுவல் பூத்துப் பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கஞ் செய்வாம்.

உத்தரகோசமங்கைப் புராணம்

காரேறு கருங்குழலுந் திருநுதலுஞ் சுடரிலைவேற் கண்ணுங் கஞ்சத், தாரேறு திருமார்புங் கரும்புருவத் தடந்தோளுங் கருணை காட்டி, நீரேறு சடாமவுலிப் பெரு மான்ற னொருபாக நீங்கா தோங்கும், வாரேறு பூண்முலை யாள் மலர்ப்பதத்தை யெந்நாளும் வழுத்தல் செய்வாம்.

வசவ புராணம்

கலைம டந்தையுங் கந்தக் கமலையும்
நிலைமை தங்கட்கு நீடப் பணியவாழ்
தலைமை யாலுயர் சங்கரி யம்பிகை
மலைம டந்தை மலர்ப்பதம் வாழ்த்துவாம். உகூ

சாப புராணம்

இருளாகி வெளியாகி யிருள்வெளிகள் தமைநீங்கி யெழு தாவேதந், தெருளாத பரையாதி திரிவிதசத் திகளாகிச் செய்கைக்கெய்தாய், பொருளாகி நின்றபிரா னணிவெள்ளி யம்பலத்துட் புரியா நின்ற, அருளாடல் கண்டுகந்த அங்க யற்கண் அம்மைபதத் தன்பு செய்வாம். ௬0

மயூரகிரிப் புராணம்

மருவலுறு தன்னையுந்தோற் றுவிருளாய் மறைத்துப் பின் கருணை மல்கிக், குருவடிவாய் வந்துமலந் தனையகற்றித் தனைச்சிவனைக் குறிப்பிற் காட்டிப், பெருகியமுத் தியை யுயிர்க்குக் கொடுத்தருளு மெந்தாயெம் பெருமான் வாமத், தருகிருக்கும் அங்கயற்கண் உமையவள்தன் சரணமல ரகத் துள் வைப்பாம். ௬௧

திருமயிலைப் புராணம்

கோங்குலா மலர்க்குழலும் பிறைநுதலுங் கயல்விழி யுங் குமுத வாயுஞ், சங்கமா மணிமிடறுங் கழைப்புயமும் மலர்க்கரமுந் தரள மாலைத், துங்கமா கிரிமுலையுங் கொடி யிடையும் பதுமவடித் துணையு முள்ள, எங்கள் நாயகியை யெழின் மயிலையிற்கற் பகக்கொடியை யிறைஞ்சி வாழ்வாம்.

ஆதிபுரி புராணம்

துய்யபரா பரைமுதலாஞ் சத்தியா யைந்தொழிற்குந் தோற்ற மாகி, உய்யவரும் விந்துமோ கினிமாயும் விளங்கு முபாதான மேவி, வெய்யமல விருளழுந்திக் கிடந்திடுமூன் றணுவினுக்கும் விருப்பி னீடும், வையமெலாம் படைத்து வளர் வடிவுடைநா யகிமலர்த்தாள் வணக்கஞ் செய்வாம்.

படிமிசையி லருளொளியாய்ப் பராபரசத் தியதாகிப் பரவி நின்று, நெடியவனுன் முகனுதி யுயிர்த்தொகைகள்

தாம் போற்று நிலேயும் பொற்பாந், தடவரைபோ லிருதன மும் பிறைநுதலு மலர்விழியுந் தயங்கா நிற்கும், வடிவுடைய மங்கையெனு மாதாவி னிருதாளே வணக்கஞ் செய்வாம்.

திருவாலங்காட்டுப் புராணம்

கரியமலர்த் தடங்குவளேக் கலக வாட்கட் கடையதனு லேந்தொழிலுங் களியுற் றீசன், புரியவரு ளேக்கருளிப் புரந்த ராதி புனேயுமணி மகுடநிரை பொழியுங் காந்தி, பரி புரச்சீ றடிப்பதுமச் செய்ய தோட்டுப் பஞ்சியொழுங் கெனப்பரவப் பணிய நல்குந், தெரிவரிய பரமாய ஆலங் காட்டுச் சேயிழைவண் டார்குழலேச் சிந்தை செய்வாம். ரு

மருதூர்ப் புராணம்

பனிவரையின் முளேத்துவிழிச் செழுங்கருணேத் தளி ரீன்று பார வெள்ளித், தனிவரையிற் பெருந்தருவைத் தழுவியண்ட கோடிமுற்றுந் தழைத்து மிக்க, முனிவரைய ருளங்கிளர்சத் ததுபூத்துச் சித்தெனுங்காய் முகிழ்த்தா னந்தக், கனிவரையா தேகொடுக்கு மழகியபைங் கொடி யிருதாள் கருது கிற்பாம். ருசு

ஆதித்தபுரி புராணம்

ஆசகலு மணிவிளக்கை யருட்கனியைச் சிவானந்த அமுதை யன்பர், நேசமெனும் பால்பருகும் பூங்கிளியை யுல கருளி னிறுத்துந் தாயை, வாசமலர்க் கருங்குழலே யாதித்த புரசயில மன்னி வாழும், ஈசனிடத் தமர்ந்தவளே ஞானநா யகியைநித்த மிறைஞ்சி வாழ்வாம். ருஎ

திருக்குற்றலப் புராணம்

இமையவரைக் குலக்கொழுந்து கயிலேவரை மேருவ ரைக் கிறைவி வேதச், சிமையவரைத் திரிகூடச் சிவக்கொ ழுந்து மணக்குமொரு செழும்பூங் கொம்பு, கமையவரைப்

புரக்கவருட் கடல்சுரந்து மடைதிறந்த கண்ணுளென்னுஞ், சமையவரைத் தலைவிகுழல் வாய்மொழியம் பிகைதிருத் தாள் தலைமேற் கொள்வாம். ௩௮

சூதசங்கிதை பூருவகாண்டம் உத்தரகாண்டம்

பரம்பொருளிற் பிரியாத தன்னியல்பை யுருவிடத் தும் பயிலத் தோற்றி, நிரம்புறுமன் படைப்பாதி யைந் தொழிலு மியற்றிவினை நிகளஞ் சித்திட், டுரம்பெறுசன் மார்க்கநிலை யளித்துயிர்கட் கொழிப்பில்சுக முறுத்த நாளும், வரம்பிலருட் டாயாகி யெடுத்தணைக்கும் பரா பரையை வாழ்த்தி வாழ்வாம். ௩௯

ஓங்குபரா பரையாதி யிருப்பறிவு தொழிலாகி யொப்பி லின்பம், வீங்குபர போகமுத வுங்கருணை யுரு வாகி விசுத்தா சுத்தத், தேங்குதனு முதலொருநான் குஞ் சுமப்ப வுபாதானத் திரய மேவிப், பாங்குபெறு மொருமுத லாய் நின்றருணின் மலசிவையைப் பாடி யுய்வாம். ௪0

புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

பன்னரிய மகிமைநிறை யானந்தப் பெருகொளியே படிவமாகி, உன்னமருங் களநிறைந்து விளங்கியிருந் தெழில் கொழிப்ப வுலகுக் கெல்லாம், அன்னையென ஐந்தொழிற் கும் வித்தாகிப் புவனங்க ளனைத்து முய்ய, மன்னுபெருங் கருணைபொழி தையனு யகிமலர்த்தாள் வணக்கஞ் செய் வாம். ௪௧

கரும்புருவச் சிலையும்வரிக் கயல்விழியும் வள்ளைவார் காது முல்லை, அருப்புமிள நகையுஞ்செங் கனிவாயும் பிறை நுதலும் அமுத வாக்கும், பொருந்தியமங் கலநாணு மலர்க் குழலும் விளங்கவெழிற் புள்ளுர் மேவுந், திருந்துமணங்

கமழ் சாந்து கழுத்துமைவா லாம்பிகைதாள் சிரமேற் கொள் வாம். ௪௨

பழனிப் புராணம்

அருவுருவந் தணிந்தசச்சி தானந்த நிமலனருட் சித்தி முத்திக், கொருமுதல்வி தொழிலைந்து மியற்றிநால் வகைத் திறனு முயிர்க்கு நல்கி, இருவினையொத் தவரேத்த மனத் தவிசி லினிதுவீற் றிருந்தெஞ் ஞான்றுங், கருணைபொழி பெரியநா யகிமலர்ச்சீ றடியெமது கருத்துள் வைப்பாம்.

திருப்பைஞ்ஞீலிப் புராணம்

சுரும்பிருக்கு மலர்க்குவளை தரித்தாளைச் சிவஞான சொரூபத் தாளை, அரும்பிருக்கு மலர்க்கணையைத் தெடுத் தாளைத் தடுத்தெனைவந் தாட்கொண் டாளை, விரும்பிருக் கும் பரவியபே ரொளியெளியேன் விழிகளிக்க வெளிநின் றாளைக், கரும்பிருக்கும் வாசகியை நீணெடுங்கண் ணாயகி யைக் கருத்துட் சேர்ப்பாம். ௪௩

திருப்பனந்தாட் புராணம்

வேதாந்தத் துட்பொருளை யாதிபரா பரையையன் பின் விரும்பா நெஞ்சில், தீதார்ந்த தமியனையுந் தடுத்தாட் கொண் டருள்புரியுந் தேவி தன்னைத், தாதார்ந்த மலர்ப் பொழிற்றென் பனந்தாளில் வளம்பெருகத் தானின் றோங்கும், நாதாந்தப் பேரொளியைப் பெரியநா யகியை நித நவிற்றி வாழ்வாம். ௪௫

வேப்பத்தூரார் திருவிளையாடற் புராணம்

போங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல இணையிலா எம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி. ௪௬

சிவஞானசித்தியார்

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்ப மிலயமொடு போக மதிகார மாகித், தேசருவ மருவுருவ முருவ மாகித் தேவியு மாய்த் தேசமொடு செல்வ மாகிப், பேசரிய வுயிரையெ லாம் பெற்று நோக்கிப் பெரும்போக மவையளித்துப் பிறப் பினையு மொழித்திட், டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். சஎ

பதிபசுபாச விளக்கம்

மூவர்க்கு முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கு மனத்திற்கு நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கு முனிவர்க்குஞ் சித்தர்க்கு நாகர்க்கும்
யாவர்க்குந் தாயாகு மெழிற்பரையை வணங்குவாம். சஅ

சித்தாந்த சிகாமணி

மாயையெனு மணல்கொடுல கெனுஞ்சிற்றி லிழைத் தாடும் வளமை யாளை, மூயமல இருளிரிக்குஞ் செழுஞ் சுடரை யுயிர்களெல்லா முன்ன மீன்ற, தாயையொரு பரசி வனைப் பெயராக்குஞ் சமவாய சத்தி தன்னைத், தூயவறி வானந்த வடிவாளை மலைமகளைத் தொழுதல் செய்வாம். சகூ

அரிச்சந்திர புராணம்

கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ்சம் பந்தனும் பா லுண்ட கும்ப, தனத்தாளே அறம்வளர்த்த காத்தாளே திரிபுரங்கள் தழலா வேவச், சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை பொறுத்திரக்கஞ் செய்யுஞ் செய்ய, மனத் தாளே நின்கமல மலர்த்தாளே யென்தலைமேல் வைத்தாள் வாயே. ருo

சிவகாமியம்மை வணக்கம்

கோயிற் புராணம்

மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி யொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ அருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி. ருக

சேக்கிழார் நாயனுர் புராணம்

பாரெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சீரெழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
ஆரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. ருஉ

பிரமோத்தர காண்டம்

பூரணியைத் தனுகரண புவனபோ கங்கள்தமைப் புரக்குமாயா, காரணியைப் பசுபாச மலமகல மெய்ஞ்ஞானக் கண்ணிற் றேன்றும், ஆரணியைப் பரமசிவ னனந்த நடத்தின் வைத்த அருட்கண் ணளைச், சீரணிகொள் பொழிற் றில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். ருஙு

நல்லூர்ப் புராணம்

பொன்னுரு மணிமார்பப் புயல்வண்ணன் றனக்கிளைய பூவை தன்னைக், கன்னரி யாலசைத்துக் கருதார்முப் புர மெரித்த கடவுள் பாகத், தெங்நாளு மிருந்தாளை யிமைய மலை மருந்தாளை யெம்மை யீன்று, பன்னாளும் அருள்புரியுஞ் சிவகாம சுந்தரியைப் பணிதல் செய்வாம். ருச

விநாயக புராணம்

சீதளசந் திரகலையுந் தினகரன்வெம் மையுங்கனலிற் செறிந்த தேசும், போதளவு நறுமணமும் போலிறைவன்

குணமான புனிதை வேறாய்க், கோதளவு முயிர்சிவத்தைக்
காமுறவே சிவகாமங் கொண்டு நின்ற, காதளவுங் கருந்தடங்
கட் சிவகாம சுந்தரியைக் கருத்துள் வைப்பாம். ௫௫

உத்தரகோசமங்கைப் புராணம்

உலகமுழு தும்பயந்துங் கன்னிமைநீங் காநிறைபா லுவந்து வைகி, அலகிலுயிர்க் கருள்சுரந்து பேரற மெண் ணென்கியற்றி யனைத்துங் காக்குந், திலகநுதற் செங்கனி வாய்ச் சிவகாம சுந்தரியாந் தேனைச் செம்பொன், மலை யரையன் குலவிளக்கை யிருள்தீர எமதகத்துள் வைத்து வாழ்வாம். ௫௬

புலியூர்ப் புராணம்

ஒருமுகமும் இருகுழையும் முக்கண்ணும் நாற்புயமும் ஒளிசேர் பூணும், உருவழகும் ஐந்தொழிலும் உயராறு முதன்றனக்கன் றருபா லூட்ட, வருமலைபோ லெழுதன மும் வடிவெட்டு மொன்பானு மகிழ்ந்து பெம்மான், திரு வுருப்பாற் பத்துருவஞ் செறிந்தசிவ காமிபதஞ் சிரமேற் கொள்வாம். ௫௭

திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

சொற்பொருளும் உடலுயிருஞ் சுடரொளியும் விரைம லருஞ் சுவையும் பாலும், நிற்குநிறை வெனக்கலந்து சிவத் திலந நியமாகி நிலவு மண்டம், பற்பலவும் படைத்தளிக்குந் தாயாகி வினைச்சமமாம் பருவந் தோன்றுஞ், சிற்பரையைத் தில்லைநகர்ச் சிவகாம சவுந்தரியைச் சிந்தை சேர்ப்பாம்.

திருப்பாதூர்ப் புராணம்

துன்னு முற்பவம் பாறிட வுயிர்க்குமெய்ச் சுடரைப்
பொன்னி னம்பலந் தன்னிடைப் பரிவொடும் போற்றி
மன்னு மாநடங் காணுபு வணங்கியே வாழும்
அன்னை தன்னடி சென்னிவைத் துன்னுதும் அன்பால். ௫௮

மயூராசல புராணம்

மலைவல்லி யம்பலவன் வாமவல்லி யகிலாண்ட வல்லி யென்றுந், தலைவல்லி வேணுபுர மகற்களிக்கப் பால்பெருகுஞ் சாந்தந் தோய்ந்த, முலைவல்லி யடியவரைக் கருக்குழியா றாதெடுத்து முத்தி நல்குங், கலைவல்லி சிவகாம வல்லிபதஞ் சொல்லிநிலை கண்டு வாழ்வாம். ௬௦

திருக்குடந்தைப் புராணம்

ஊட்டியரு ளும்பர்பிரான் உண்மைமுனி வரர்க்குரையா துரைத்தாற் போல, ஈட்டியிரு வினையவற்றுட் கட்டுண்டு திரியுயிர்கட் கேலாத் துன்பம், வீட்டியளப் பரியசுக மேவ விடங் கொடுக்குமத்தே வினைக்காட் டாது, காட்டியொளிர் பொன்மன்றுள் மணிவிளக்கி னிற்பாளைக் கருதி வாழ்வாம்.

குளத்தூர்ப் புராணம்

நீர்பூத்த முகிலனைய குழலின் தேசு நிலவுமுழு மதிவதனப் பொலிவுஞ் சீர்சால், வார்பூத்த முலைமுகிழின் வனப்பு நுண்ணூன் மானுமணி யிடையழகுங் காணுந் தோறும், ஆர்பூத்த மலர்ச்சடிலப் பகவ னோகை யகத்தடங்கா தெழநடஞ்செய் தன்னோ டென்னச், சீர்பூத்த மன்றினவ னிடத்தின் வாழுஞ் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். ௬௨

திருவாளொளிபுற்றூர்ப் புராணம்

அழியாத சிவானந்த சாகரமா லாதியுயி ரனைத்துந் தோய்வான், ஒழியாத பெருங்கருணை யூற்றெடுப்ப மறையாதி யொருங்கு தேர்ந்துங், கழியாத சிவபெருமான் மணிமன்றுள் நவிற்று நடங் காண்டல் பூண்ட, பழியாத கருங்கடைக்கட் சிவகாம சுந்தரிதாள் பரவி வாழ்வாம். ௬௩

திருக்குறுக்கைப் புராணம்

மாலாதி யுயிரிடத்து வைத்தபெருங் கருணைவள மலிதலால்விண், காலாதி யைம்பூதக் கலப்புறு தவையின்பக்

கலப்புமேவ, மேலாதி முதல்வனியற் றுனந்த நடங்காணும் விரதம் பூண்ட, சேலாதி மருட்டும்விழிச் சிவகாம சுந்தரி தாள் சென்னி சேர்ப்பாம். கூச

மகாராஜா துறவு

அருளுருவா யுயிர்கள்தமக் கன்னை யாகி யஞ்ஞானந் தனையகற்றி யமல மாகி, மருளிலதாய் மெய்ஞ்ஞான மாகு முத்தி வாய்த்திடவே காத்தருள வானோ ரேத்த, இருள் கெடவே மிளிருமிரும் கழல்க ளார்ப்ப இறைபுரியுந் திரு நடத்தாற் களித்துவாழுந், தெருண்மருவு மறைநான்கும் பரவுந் தில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். கூரு

காளியம்மை வணக்கம்

திருச்செங்கோட்டுப் புராணம்

கொம்மை வெம்முலைக் களிற்றொடுங் குழைகவர் கூர் விழி மானோடுஞ், செம்மை பெற்றபொற் கலையொடுந் திகழ் நுதல் திருவருண் முகமான, விம்மி தங்கொளம் புலியொடுஞ் சிங்கமேல் விளங்குமின் செங்கோட்டில், அம்மை நம்மையா ளழகிய நாயகி அடிமல ரிணைபோற்றி. கூசு

அரிச்சந்திர புராணம்

அந்தரியா மளையமலை யால காலி யம்பிகைமா தரி கௌரி யாளி யூர்தி, வந்தரிநான் முகன் வணங்கு மலர்த் தாட் சூரி வைரவிதா ருகவைரி மதங்கி நீல, கந்தரியோ கினிசூலி நீலி நாக கங்கணிசங் கரிவிமலை காளி வால, சுந்தரிசா முண்டிதிரி சூலி கோலத் துணையடியெம் முடிமீது சூடி னேமால். கூஎ

தெய்வயானையம்மை வள்ளியம்மை வணக்கம்

திருப்பரங்கிரி புராணம்

வார்கொண்ட கொங்கையெனுங் கோடு தன்னால் வடி வேலர் பன்னிருதோள் வரையைப் பாய்ந்து, தார்கொண்ட

கடம்பதனை யுழக்கி யோகத் தண்பாவை படிந்திறைவர் தடங்கண் வண்டின், போர்கொண்ட விழிக்கருணை மதத்தை யூற்றிப் பொருபடையா யென்வினையைப் பொடித்து நாளும், பார்கொண்ட பரங்கிரிவாழ் தெய்வ யானை பதமலரை யிதயமலர் பதித்து வைப்பாம். சுஅ

மணிகொண்ட மானிடத்து முளைத்து வேடர் மனைபதிந்து பசுந்தழையாய் மருவுஞ் சோதி, யணிகொண்டு தழைந்தருளிக் கொழுகொம் பாக அமலர்புயந் தழுவி வெள்ளி யசல மேறிக், கனிகொண்ட புகழ்பூத்தென் வினையைக் காய்த்துக் கவின்பழுத்துக் கண்டவர்க்குக் கருணையூற்றிப், பணிகொண்ட வள்ளியெனுங் கொடியென் னுள்ளப் பங்கயத்தைச் சுற்றியிடப் பதித்து வாழ்வாம். கூகூ

திருத்தணிகைப் புராணம்

இறைகதித்த சூர்முதலை யிறப்பவா னேயினையோ னவாற்றுன், முறைகதித்த இருசுடரே முகத்துவிழி யெனத்தெரிக்கு முறைமை யேய்ப்ப, நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன் விழியருகு நலக்க வேந்தி, நிறைகதித்த வுளத்தொடிடம் வலமமர்ந்த மாதர்பத நினைத்தல் செய்வாம்.

மயூராசல புராணம்

கானமுறுங் கலைமகள்செங் கமலமகள் முதன்மகளிர் கருதிப் போற்று, ஞானமகட் கொருபாகந் தருதேக னெங்களையனுளும் வாழ்த்து, மானமரு மகள்சித்தன் மகளெனச் சொன் மாட்சிதரு மகளுற் கோட்டின், யானைமக ளிந்திரனுக் கரியமகள் மருமலர்த்தாட் கன்பு செய்வாம். எக

புள்ளிமயில் வருபாக னிமையவரை மயிலுதவும் புதல்வன் சூரை, அள்ளியயி லெனவயிலுக் கருளினோ ளறுமுகத் தம்மான் வேண்டத், தெள்ளியயி லெனவிடியைத் தந்த

வனுக் குவகையருள் சிறப்பினுனை, வள்ளிமயிலைப்பணிந்து
கள்ளமயலைத்தணந்து வாழ்கு வாமே. எ௨

திருவேரகப் புராணம்

ஐவ ராயரு ளாறுமா முகநிறை யண்ணல்
உய்வ தாகவோர் பன்னிரு புயத்தினு முழக்கித்
தைவம் பாரிரு கொங்கைமால் யானைகள் தணக்குந்
தெய்வ யானைபொற் றுள்மலர் சென்னிமேற் சேர்ப்பாம்.

விள்ளநறுந் துணர்கொழுதி யஞ்சிறைய சுரும்பரிசை விழைந்து பாடுங், கள்ளவிழு மலர்க்கூந்தற் குவளைவிழிப் பவள விதழ்க் கதித்து மீறித், தள்ளரிய வடம்புனைந்து குரும்பையெனத் ததும்பிமிகத் தடித்தண் ணுந்த, வள்ள முலைத் திருவழகி வள்ளிமலர்ப் பாடகத்தாள் வணக்கஞ் செய்வாம். எ௪

பழனிப் புராணம்

பழுதிலறு தொழின்மறையோர் துதிக்கையுந்தா னமும் படைத்துப் பருமந் தாங்கிச், செழுமணிப்பூண் இழைத்தமுலைத் துணைமருப்பும் பூணுதலுந் திருவி னோங்கிக், கொழுமலர்க்கூ தளந்தொடுத்த கண்ணியும்பூங் கடம்பு நறுங் குரவும் வேய்ந்த, எழில்தரும்பா கனுக்குவகை யுதவு தெய்வ யானைபதம் இதயஞ் சேர்ப்பாம். எரு

கண்ணகன்மா விரும்புவியி லின்றோர்புதி தென்னவு முட் கவன்று வேடர், துண்ணெனமூ விருமுகமு மேனை யவும் படைகளுந்தோன் றுமற் றோன்றிப், பண்ணவர்கண் கவரவளர் வேங்கைகொழு கொம்பரெனப் படர்ந்து பற் றுங், தண்ணமலர் பொதுள்வள்ளிப் பசுங்கொடிச்செந் தளிரடிகள் சரண்புக் கேமால். எசு

கந்தபுராணச் சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடனே எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்க அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது. கலிகோ பயிண்டு விலை ரூபா 3.

முருகவேள் பனுவல் திரட்டு

சுப்பிரமணியபக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகை சந்நிதி முறை, கந்தபுராணம், தணிகைப்புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிருக்கின்றன. கலிகோ பயிண்டு ரூபா 1.

முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது : திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அமுதை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையும் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒரு கால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை. விலை அணா 8.

திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்
கிளேஸ் அணா 0 5 ரப் 0 3
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை ... 0 12
சிவபுண்ணியத் தெளிவு 0 3

குசேலோபாக்கியானம்

மூலமும் விசேட அரும்பத உரையும்

கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பு, ஸ்டிப் பைண்டு விலை ரூபா 1 4 0.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.